# செய்தி குறிப்பு

புதுச்சேரி அரசு, பட்டா மாற்றம் / பட்டா உட்பிரிவு / எல்லை நிர்ணயம் ஆகியவற்றில் ஏற்பட்ட தாமதம் தொடர்பாக பொது மக்களின் குறைகளை உரிய முறையில் கருத்தில் கொண்டு, தற்போதுள்ள நில அளவையர்கள் பணிச்சுமையையும் கருத்தில் கொண்டு உரிமம் பெற்ற நில அளவையர் மற்றும் உரிமம் பெற்ற நில வரைவாளர்களை ஈடுபடுத்தும் பொருட்டு புதுச்சேரி உரிமம் பெற்ற நில அளவையர் மற்றும் உரிமம் பெற்ற நில வரைவாளர் விதிகள், 2019 ஐ உருவாக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது. எனவே பட்டா மாற்றம் செயல்பாட்டின் போது ஏற்படும் அதிகப்படியான தாமதம் உரிமம் பெற்ற நில அளவையர்கள் மற்றும் உரிமம் பெற்ற நில வரைவாளர் ஒதுக்கீட்டால் குறைக்கப்படும். இதன் காரணமாக பட்டா பரிமாற்ற செயல்பாட்டின் போது பொறுப்பு மற்றும் வெளிப்படைத்தன்மை இருக்கும்.

2. ஆகவே, புதுச்சேரியைச் சேர்ந்த கீழ்க்காணும் தகுதிகளையுடைய விண்ணப்பதாரர்களிடம் இருந்து உரிமம் பெற்ற நில அளவையர் மற்றும் உரிமம் பெற்ற நில வரைவாளர் உரிமம் பெற விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன..

**தகுதிகள் :**

**நில அளவையர் -**

ஐ.டி.ஐ (நில அளவை)சான்றிதழ் அல்லது சிவில் இன்ஜினியரிங் / கட்டிடக்கலை டிப்ளோமா அல்லது சிவில் இன்ஜினியரிங் / கட்டிடக்கலை பட்டம் பெற்றிருக்க வேண்டும். ஏதேனும் ஒரு அங்கீகாரம்பெற்ற வாரியம் / பல்கலைகழகமாக இருக்க வேண்டும்.

**நில வரைவாளர்-**

ஐ.டி.ஐ (நில வரைவாளர்)சான்றிதழ் அல்லது சிவில் இன்ஜினியரிங் / கட்டிடக்கலை டிப்ளோமா அல்லது சிவில் இன்ஜினியரிங் / கட்டிடக்கலை பட்டம் பெற்றிருக்க வேண்டும். ஏதேனும் ஒரு அங்கீகாரம்பெற்ற வாரியம் / பல்கலைகழகமாக இருக்க வேண்டும்.

**ஒய்வு பெற்ற அரசு அதிகாரி –**

நில அளவையர் அல்லது நில வரைவாளர் அல்லது அதற்குமேல் பதவி வகித்து, நில அளவை மற்றும் பதிவேடுகள் இயக்ககம் அல்லது வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறையில் இருந்து ஒய்வு பெற்றவர்கள் இதற்கு விண்ணப்பிக்க தகுதியானவர்கள்.

3. உரிமம் பெற்ற நில அளவையர் மற்றும் உரிமம் பெற்ற நில வரைவாளர் உரிமம் பெறுவதற்கான விண்ணப்ப படிவம் மற்றும் புதுச்சேரி உரிமம் பெற்ற நில அளவையர் மற்றும் உரிமம் பெற்ற நில வரைவாளர் விதிகள், 2019 ஆகியவற்றை https://collectorate.py.gov.in என்ற இணையதள முகவரியில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

4. பூர்த்தி செய்த விண்ணப்பங்களை உரிய ஆவணங்களுடன் புதுச்சேரி, சாரம், காமராஜர் சாலையில் உள்ள நில அளவை மற்றும் பதிவேடுகள் இயக்ககத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.

டாக்டர் T.அருன், ஐ.ஏ.எஸ்
செயலாளர் (வருவாய்)

Scanned by CamScanner